## இந்து கலாசார நிதியம் - 2015

இந்து கலாசார நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1985 இன் 31 ஆம் இலக்க இந்து கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 02. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்து கலாசார நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் இலக்கம் பீ.எப்.423 இன் 4.1 (இ) பந்தியின் படி பாதீடொன்று அங்கீகரித்துக் கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 1,528,732 செலவிடப்பட்டிருந்தது.

## 03. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 786,656 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,366,697 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 580,041 வீழ்ச்சி காணப்பட்டது. முதலீட்டு வட்டி மற்றும் இறுவெட்டுக்களின் விற்பனை வருமானம் ரூபா 746,537 இனால் குறைவடைந்தமை அதற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 04. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இந்து கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் 5 ஆவது பிரிவின்படி நிதியத்தின் நோக்கம் மற்றும் இலக்குகளாக இந்து வணக்கத்தலங்களை அபிவிருத்தி செய்தல், இந்து மதத்தையும் கலாசாரத்தையும் மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், இந்து சமயம் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகள், வெளியீடுகளை காட்சிப்படுத்துதல் மற்றும் மாற்றல் நடவடிக்கைகளிற்காக நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல் போன்றவை காண்பிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், இந்து கலாசார நிதியத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி இந்து கோயில்களுக்காக உதவிகளை வழங்குதல், மாடுகளைப் பராமரிப்பதற்காக உதவிகளை வழங்குதல் மற்றும் இந்து அறநெறி ஆசிரியைகளுக்காக சேலைகளைக் கொள்வனவு செய்தல் என 3 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதன்படி நிதியத்தினால் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக போதியளவான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் வருமானம் ரூபா 2,315,388 ஆக இருந்த போதிலும் அந்தக் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக ரூபா 1,528,732 தொகை அதாவது 66 சதவீதமான அளவே செலவிடப்பட்டிருந்தது. அந்த செலவினங்களில் 76 சதவீதமான ரூபா 1,156,344 தொகை இந்து அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்காக சீருடைகள் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அவை கிடைத்திருக்கவில்லை. நிதியத்தின் வருமானங்களை அதன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ஈடுபடுத்துவதற்குப் பதிலாக அந்த நிதி நிலையான வைப்புக்களின் முதலீடு செய்வதற்கு ஆர்வம் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலையான வைப்புக்களில் முதலீடு ரூபா 21,830,473 ஆக இருந்தது.

**4.3 செயற்பாட்டு செயற்திறனின்மை**

நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் 07 ஆவது சபை அமர்வின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி கீரிமலை நகுலேஸ்வரம் கோயிலின் மாடொன்றைப் பராமரிப்பதற்காக ரூபா 60,000 தொகையொன்று உரிய கோயிலுக்கு வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது தெல்லிப்பளை பிரதேச செயலாளருக்கு காசோலை மூலம் செலுத்தப்பட்டிருந்தது. அந்தப் பணம் நிதியம் எதிர்பார்த்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் பயன்படுத்துகின்றதா என்பது தொடர்பாக பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**05. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

நிதியத்தின் நீண்ட கால இலக்குகளைக் காட்டும் வகையில் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்**

கடந்த மூன்று வருடகாலத்தின் போதான செயற்பாடுகளைக் ஒரே மாதிரி காண்பித்து செயல் நடவடிக்கைத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை நிதியத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக காலத்தின் தேவையினை இனங்கண்டு பௌதீக மற்றும் நிதிசார் இலக்குகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**06. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

நிதியத்தின் நிர்வாகம் தொடர்பாக பின்வரும் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கொள்வனவு - சீருடைகள் கொள்வனவு செய்யும் போது இலங்கை தேசிய கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளைப் பின்பற்றல்

(ஆ) திட்டமிடல் - நிதியத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்து அதன்படி நடவடிக்கை எடுத்தல்.